| 16 | Debt Service Coverage Ratio | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. |
| 17 | Interest Service Coverage Ratio | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. |

**Notes:**

1. The above financial results of the Company were reviewed by the Audit Commitee and approved and taken on record by the Board of Directors at the meeting held on May 20, 2023. These results have been Audited by the Statutory Auditors of the Company, who have issued an unmodified report thereon.
2. The above is an extract of the detailed format of Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 and Regulation 52 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations 2015. The full format of the Financial Results are available on the Stock Exchanges websites **www.nseindia.com** and **www.bseindia.com** and on the Company's Website **www.tfciltd.com.**
3. For the other line items referred in regulation 52(4) of the Listing Regulations, pertinent disclosures have been made to the National Stock Exchange and Bombay Stock Exchange and can be accessed on the Stock Exchanges websites **www.nseindia.com** and **www.bseindia.com** and on the Company's Website **www.tfciltd.com.**

**for Tourism Finance Corporation of India Ltd.**

**Place: New Delhi**
**Date: May 20, 2023**

**(Anoop Bali)**
**Whole Time Director & CFO**

### FORM NO. INC-25 A

**Advertisement to be published in newspaper for conversion of public company into a private company**

Before the Regional Director, Ministry of Corporate Affairs
South East Region

In the matter of the Companies Act, 2013, Section 14 of the Companies Act, 2013 and Rule 41 of the Companies (Incorporation) Rules, 2014

AND

In the matter of **M/s. RASU TOOLS LIMITED** (CIN: U28932TG1983PLC003958), having its Registered Office at D-18 TO 20, Industrial Estate Patancheru, Sangareddy District Telangana 502319 India.

Notice is hereby given to the general public that the company intending to make an application to the Central Government under section 14 of the Companies Act, 2013 read with aforesaid rules and is desirous of converting into a private limited company in terms of the special resolution passed at the Extraordinary General Meeting held on Wednesday the 10th day of May, 2023 to enable the Company to give effect for such conversion.

Any person whose interest is likely to be affected by the proposed change/ status of the company may deliver or cause to be delivered or send by registered post of his objections supported by an affidavit stating the nature of his interest and grounds of opposition to the concerned Regional Director, South East Region, 3rd Floor, Corporate Bhawan, Bandlaguda, Nagole, Tattiannaram Village, Hayat Nagar Mandal, Ranga Reddy District, Hyderabad – 500068, Telangana within fourteen days from the date of publication of this notice with a copy to the applicant company at its registered office at the address mentioned below:

**RASU TOOLS LIMITED**
**D-18 TO 20, INDUSTRIAL ESTATE PATANCHERU**
**SANGAREDDY DISTRICT TELANGANA 502319 INDIA**

For and on behalf of the Applicant
For **RASU TOOLS LIMITED**
**SUDHIR REDDY POONDLA**
MANAGING DIRECTOR
(DIN: 01223269)

Date : May 20, 2023
Place : Hyderabad

## SARASWAT CO-OPERATIVE BANK LIMITED.

ZONAL OFFICE - IX, No.47, 1st Floor, Sogo Properties, 100 Feet Road, 4th Block, Koramangala, Bengaluru-560 034. Ph : 080-4093 3173 / 174.

**POSSESSION NOTICE**
[as per Rule 8 (1) of the Security Interest (Enforcement) Rules, 2002

The undersigned being the authorised Officer of Saraswat Co-op. Bank Ltd., under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (54 of 2002) and in exercise of powers conferred under Section 13 (12) read with rule 3 of the Security Interest (Enforcement) Rules 2002 issued demand notice dated **04.03.2023** calling upon the borrower Mr. Awadhesh Kumar (Principal Borrower /Mortgagor) & Mrs. Babita Kumari (Guarantor)to repay the amount mentioned in the notice being **Rs.56,55,738.14** (**Rupees:Fifty Six Lakhs Fifty Five Thousand Seven Hundred Thirty Eight and Paise Fourteen Only**) as on **03.03.2023**plus interest and incidental charges, if any, thereon within 60 days from the date of receipt of the said notice.

The Borrowers/Guarantors/Mortgagors having failed to repay the amount, notice is hereby given to the Borrowers/Guarantors/Mortgagors and the public in general that the undersigned has taken possession of the property described herein below in exercise of powers conferred on him under sub section (4) of section 13 of the Act read with rule 8 of the Security Interest (Enforcement) Rules, 2002 on this **15.05.2023.**

The Borrowers/Guarantors/Mortgagors in particular and the public in general are hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of Saraswat Co-op. Bank Ltd., for an amount of **Rs.56,55,738.14** (Rupees: **Fifty Six Lakhs Fifty Five Thousand Seven Hundred Thirty Eight and Paise Fourteen Only**) as on 03.03.2023 and interest thereon.

The Borrowers/Guarantors/Mortgagors attention is invited to provisions of sub-section (8) of Section 13 of the Act, in respect of the time available, to redeem the secured assets.

**DESCRIPTION OF THE PROPERTY**

**Schedule "A" Property (Description of the Entire Property)**

All the piece and parcel of Converted Sy. No. 43/5, measuring 4 acres; Converted Sy. No. 43/30 measuring 2 acres; Converted Sy. No. 238 measuring 3 acres 22 guntas and Sy. No. 43/30 measuring 1 acre 12 guntas, in all measuring 10 acres 34 guntas, Kambipura Village, KengeriHobli, Bangalore South Taluk, Bangalore and bounded on the: East by: Property Sy. No. 43, Kambipura Village, West by: Bangalore-Mysore State Highway and Nala, North by:Property Sy. No. 249, Kambipura Village, South by:Property Sy. Nos. 248 and 237, Kambipura Village.

**Schedule "B" Property**
**(Description of undivided share of the Apartment)**

38.25 sq. mtrs. of undivided share, right, title, interest and Ownership in Schedule "A" property which comes to approximately 411.69 sq. ft.

**Schedule "C" Property (Description of the Apartment)**

All the piece and parcel of residential Apartment No. F-0944, 9th floor of Tower "F" in the Project "BRIGADE PANORAMA" built on Schedule "A" Property, measuring 0938 sq. ft. of carpet area, 66 sq. ft. Balcony area and 403 sq. ft. of proportionate share in common areas such as passages, lobbies, lifts, staircases and other areas of common use and totally measuring 1407 sq. ft. of saleable area, approximately, with 1 Valet Covered Car Parking in the Lower/Upper Basement level/Ground level and the Apartment is bounded on the: East by : Open Space, West by : Entrance Lobby, North by :Open Space, South by :Lift Lobby.

The Walls of Apartment is built out of Solid Brick and Cement with RCC Roofing and Vitrified/Ceramic Flooring with electricity, Water and Sanitary connections, and also constructed with Teak Wood and Windows of UPVC Sliding Panels.

Sd/-
**AUTHORISED OFFICER**
**Saraswat Co-operative Bank Ltd.,**

**Date : 15/05/2023**
**Place : Bengaluru**

மது அருந்திய 2 பேர் பலியான விவகாரம்

# டாஸ்மாக் ஊழியர்கள் 4 பேர் சஸ்பெண்ட்

## 24 பேரிடம் போலீஸ் விசாரணை

தஞ்சை, மே 22–

தஞ்சை கீழவாசல் கொண்டிராஜபாளையம் பகுதியில் தற்காலிக மீன் மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இந்த மீன்மார்க்கெட் எதிரே உள்ள ஒரு கட்டிடத்தில் டாஸ்மாக் மதுக்கடை, மதுபான பார் செயல்பட்டு வருகிறது. இந்த கடைக்கும், மதுபான பாருக்கும் ஒரே வாசல் தான் உள்ளது. இந்த பாருக்கு நேற்று காலை 11 மணி அளவில் தஞ்சை கீழவாசல் படைவெட்டி அம்மன்கோவில் தெருவை சேர்ந்த குப்புசாமி(68), பூமால் ராவுத்தன் கோவில் தெருவை சேர்ந்த குட்டி விவேக்(36) ஆகியோர் மது குடிக்க சென்றனர். குப்புசாமி தற்காலிக மீன் மார்க்கெட்டில் மீன் வியாபாரம் செய்து வந்தார். குட்டிவிவேக் கார் டிரைவராக வேலை பார்த்து வந்தார்.

டாஸ்மாக் கடை மதியம் 12 மணிக்கு தான் திறக்கப்படும் நிலையில் அதற்கு முன்னதாகவே பாரில் மது விற்பனை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. முதலில் குப்புசாமி பாருக்கு சென்று மது அருந்தி விட்டு எதிரே உள்ள மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு வந்தார். அங்கு வாயில் நுரை தள்ளிய நிலையில் மயங்கி விழுந்தார். அப்போது அங்கு மீன்வாங்க வந்த குப்புசாமியின் மனைவி, அவரை ஆட்டோவில் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அவர் சென்ற சிறிது நேரத்தில் குட்டிவிவேக் மது அருந்தி விட்டு கடையை விட்டு வெளியே வந்த நிலையில் டாஸ்மாக் கடையின் முன்பு மயங்கி விழுந்தார். அவரை அருகில் இருந்தவர்கள் தஞ்சை மருத்துவமனைக்கு அழைத்துசென்றனர். இதில் குப்புசாமி வழியிலேயே உயிரிழந்தார். குட்டிவிவேக் மருத்துவமனையில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தார்.

இந்த தகவல் அறிந்ததும் அந்த பகுதியில் ஏராளமான பொதுமக்கள் திரண்டு வந்தனர். மேலும் போலீசாரும் அங்கு குவிக்கப்பட்டனர். இதற்கிடையில் அங்கு திறக்கப்பட்டு இருந்த டாஸ்மாக்கடையும் உடனடியாக பூட்டப்பட்டது. பாருக்கும் சீல் வைக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், எஸ்பி ஆஷிஷ் ராவத், உதவி கலெக்டர் (பொ) பழனிவேல், தாசில்தார் சக்திவேல், டாஸ்மாக் தாசில்தார் தங்க பிரபாகரன் ஆகியோரும் வந்து விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து இன்றும் டாஸ்மாக் கடை மூடப்பட்டது. இதுகுறித்து தஞ்சை நகர கிழக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் நேற்றிரவு அளித்த பேட்டி: உயிரிழந்த இருவரின் உடலிலும் சயனைடு கலக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

இறந்தவர்களில் விவேக்குக்கு குடும்ப பிரச்னை இருந்தது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்திருக்கிறது. மதுபான கடைக்கும், உயிரிழந்தவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. உயிரிழந்த 2 பேரும் தற்கொலை செய்து கொண்டனரா? என்பது போலீசார் விசாரணைக்கு பிறகே தெரிய வரும். இதற்காக சிறப்பு குழு அமைத்து விசாரித்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில் தஞ்சையை சேர்ந்த டாஸ்மாக் பார் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் உள்பட 24 பேரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### 4 பேர் சஸ்பெண்ட்

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர் முருகன் மற்றும் விற்பனையாளர்கள் 3 பேரை சஸ்பெண்ட் செய்து டாஸ்மாக் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து உள்ளது.



பணமோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்ட ஆம் ஆத்மி மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான சத்யேந்தர் ஜெயினின் உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து, இன்று அவர் சப்தர்ஜங் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில்

# பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பேரின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமை செயலகத்தில், தமிழ்நாடு மின்வாரியத்தில் பணி காலத்தின்போது உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கிடும் அடையாளமாக, 10 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இதில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், செந்தில்பாலாஜி, தலைமை செயலாளர் வெ.இறையன்பு, எரிசக்தி துறை கூடுதல் தலைமை செயலாளர் ரமேஷ்சந்த் மீனா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவரும் கூடுதல் தலைமை செயலாளருமான ராஜேஷ் லக்கானி, இயக்குநர் (பகிர்மானம்) சிவலிங்கராஜன் பங்கேற்றனர்.

சென்னை, மே 22–

தமிழ்நாடு மின்சார வாரியத்தில், பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாட்டில் தொழிற்துறை, விவசாயம், நகர்புற மற்றும் ஊரக மேம்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக அதிகரித்து வரும் மின் தேவைக்கு ஏற்றவாறு மக்களுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்கள் அமைத்தல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களின் திறனை மேம்படுத்தும் விதமாக கூடுதல் மின் மாற்றிகள் அமைத்தல், சரியான மின் அழுத்தத்துடன் கூடிய சீரான மின்சாரம் வழங்குதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பணிகளை, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வாயிலாக அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களில், தொழில்நுட்ப உதவியாளராக 24 நபர்களுக்கும், இளநிலை உதவியாளராக (கணக்கு) 2 நபர்களுக்கும், மின் கணக்கீட்டாளராக 14 நபர்களுக்கும், தட்டச்சராக 1 நபருக்கும், களப்பணி உதவியாளராக 56 நபர்களுக்கும், உதவி வரைவாளராக 1 நபருக்கும், காவலாளியாக 5 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகிறது. இந்த பணி நியமன ஆணைகளை வழங்கும் நிகழ்ச்சி தலைமை செயலகத்தில் இன்று காலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, 103 பேருக்கு வழங்கிடும் அடையாளமாக 10 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் இறையன்பு, எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர் (பகிர்மானம்) சிவலிங்கராஜன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்க சில தினங்களே உள்ள நிலையில், சென்னை சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் மகளிர் மேல் நிலைப்பள்ளியில் உள்ள கிடங்கில் இருந்து 6 முதல் பிளஸ் 2 வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் அனுப்பும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில்

# சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை

## டிடிவி.தினகரன் டிவிட்

சென்னை, மே 22–

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் இன்று தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக அறவழியில் போராடியவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் 13 பேர் உயிரிழந்ததன் நினைவு நாள் இன்று. கடந்த பழனிசாமி ஆட்சியில் நடைபெற்ற இந்த படுபாதக துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும், அதில் அளிக்கப்பட்ட பரிந்துரைகள் மீது தமிழ்நாடு அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

துப்பாக்கி சூட்டில் உயிர் நீத்த 13 பேரின் தியாகங்களை நெஞ்சில் ஏந்தி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் இந்நேரத்தில், துப்பாக்கி சூடு சம்பவத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது மட்டுமே உயிர் நீத்தோரின் தியாகத்துக்கான உண்மையான அஞ்சலியாக இருக்கும் என்பதை வலியுறுத்துகிறேன்.



தாம்பரம் முடிச்சூர் வெளிவட்ட சாலையில் தனியார் ஆம்னி பேருந்து நிறுத்துவதற்காக இடம் தேர்வு செய்தல், சிக்கனா ஏரி மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் குறித்து அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, தா.மோ.அன்பரசன் ஆய்வு மேற்கொண்டனர். உடன் எம்எல்ஏக்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி மற்றும் அதிகாரிகள்.

# கிளாம்பாக்கம் பஸ் நிலையம் ஜூலை இறுதியில் திறப்பு

## அமைச்சர் சேகர்பாபு பேட்டி

பல்லாவரம், மே 22–

கிளாம்பாக்கம் பஸ் நிலையம் வரும் ஜூலை மாத இறுதிக்குள் திறக்கப்படும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

பல்லாவரம் அருகே பம்மல், ஈஸ்வரி நகர் பகுதியில் ₹2 கோடி மதிப்பில் புதிதாக அமைய இருக்கும் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகளை இன்று காலை அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆய்வு செய்தனர். பின்னர் பி.கே.சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது:

கிளாம்பாக்கம் பஸ் நிலையத்துக்கு வந்து செல்லும் ஆம்னி பஸ்களை நிறுத்தி வைப்பதற்கு வசதியாக, வண்டலூர்–மீஞ்சூர் வெளிவட்ட சாலை, முடிச்சூரில் 5 ஏக்கர் நிலபரப்பில் ₹29 கோடி மதிப்பில் புதிதாக பஸ் நிலையம் அமைக்கப்பட உள்ளது. இப்பணிகள் அனைத்தும் இன்னும் 6 மாதங்களில் நிறைவு பெற்று, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். அதோடு 28 இடங்களில் ஆய்வு பணிகளை மேற்கொண்டு, அவற்றை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். அதன்படி, மேம்பாலங்களின் கீழ்பகுதியில் பூங்காக்கள் அமைத்தல், பள்ளி சீரமைப்பு, பஸ் நிலையம் சீரமைப்பு போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ₹2 கோடி மதிப்பில் சீக்கனா ஏரியை மேம்படுத்துதல், முடிச்சூர் ரங்கா குளத்தை ₹1.5 கோடி மதிப்பில் மேம்படுத்தல் மற்றும் ஆலந்தூர் தொகுதியில் ₹10 கோடி மதிப்பில் புதிய திருமண மண்டபம் கட்டுதல் போன்ற பணிகளை இன்று ஆய்வு செய்தோம். இவைகள் அனைத்தும் 3 மாதங்களில் முடிக்க திட்டமிட்டிருக்கிறோம். இம்மாத இறுதிக்குள் அனைத்து பணிகளையும் துவக்குகிறோம்.

கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தின் அடிப்படை தேவைகள் கணக்கிடப்படாமல் உள்ளதாலும், தற்போது, போக்குவரத்து நெரிசலை சரிசெய்ய போதுமான வேலைகளை செய்து வருகிறோம். அதனால் வரும் ஜூன் மாதம் பஸ் நிலைய திறப்பு தள்ளி போனாலும், ஜூலை மாதம் கண்டிப்பாக திறக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். கிளாம்பாக்கம் பஸ் நிலையத்துக்கும் முடிச்சூரில் அமையவிருக்கும் புதிய தனியார் ஆம்னி பஸ் நிலையத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. 2 பணிகளும் வேறு வேறு. அதனால், வரும் ஜூலை மாத இறுதிக்குள் கிளாம்பாக்கம் பஸ் நிலையம் திறக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் எம்எல்ஏக்கள் தாம்பரம் எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் இ.கருணாநிதி, தாம்பரம் துணைமேயர் காமராஜ், மாநகராட்சி ஆணையர் அழகுமீனா, மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# அன்பழகன் ₹45 கோடி, விஜயபாஸ்கர் ₹36 கோடி...

முதல் பக்க தொடர்ச்சி

வெள்ளி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

பின்னர் கே.பி.அன்பழகன் அவரது உறவினர்களான பி.ரவிசங்கர், சரவணன், சரவணக்குமார் மற்றும் நெருங்கிய கூட்டாளிகளான மாணிக்கம், மல்லிகா, எஸ்.எஸ். தனபால் ஆகியோர் இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்துள்ளனர். மேலும் அவரது பெயரிலும், அவரது குடும்பத்தினர் பெயரிலும் நிலங்கள், தொழில் முதலீடுகள், வங்கி இருப்புகள், நிலம் இயந்திரம் தளவாடங்கள், ஆபரணங்கள், வாகனங்கள் என சொத்துக்களாகவும், முறைகேடாக பெற்ற பணத்தை அவருக்கு சொந்தமான சரஸ்வதி பச்சியப்பன் கல்வி அறக்கட்டளைக்கு அனுப்பியதன் வழியாகவும் என மொத்தம் 45 கோடியே 20 லட்சத்து, 53 ஆயிரத்து 363 ரூபாய் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார்.

மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தலைவர் இசைவாணை பெறப்பட்டது.

அதை தொடர்ந்து இன்று தருமபுரி சிறப்பு நீதிமன்ற தலைமை குற்றவியல் நடுவர் முன்பு குற்றம் சாட்டப்பட்ட 10 நபர்கள் மற்றும் சரஸ்வதி பச்சியப்பன் கல்வி அறக்கட்டளை மீது ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் 2018ம் ஆண்டு திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டம் 1860 ன்படி உரிய பிரிவுகளின் கீழ் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் 10 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

முன்னதாக தருமபுரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு லஞ்ச ஒழிப்பு போலீஸ் அலுவலகத்தில் இருந்து ஜீப்பில் குற்றப்பத்திரிக்கை நகல்களை டிஎஸ்பி கிருஷ்ணராஜன் தலைமையில் இன்ஸ்பெக்டர் பழனிசாமி மற்றும் போலீசார் ஏற்றிவந்தனர்.

### விஜயபாஸ்கர்

அதேபோல், புதுக்கோட்டை மாவட்ட விராலிமலை சட்டமன்ற அதிமுக உறுப்பினரான சி.விஜயபாஸ்கர், கடந்த 1.4.2016 ம் ஆண்டு முதல் 31.3.2021ம் ஆண்டு காலத்தில் தமிழ்நாடு முன்னாள் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக பதவி வகித்தார். இவரது பணிக்காலத்தில் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி தனது பெயரிலும், தனது மனைவி ரம்யா மற்றும் அவரது குடும்பத்தினர் பெயர்களில் மொத்தம் 27 கோடியே 22 லட்சத்து 56 ஆயிரத்து 736 ரூபாய் அளவிற்கு வருமானத்துக்கு அதிகமாக முறைகேடாக சொத்து சேர்த்ததாக, புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்தது.

அதை தொடர்ந்து சி.விஜயபாஸ்கருக்கு சொந்தமான 56 இடங்களில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சோதனை நடத்தப்பட்டது. அந்த சோதனையில் பல லட்சம் ரொக்கம், தங்கம், வெள்ளி பொருட்கள் மற்றும் பல கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.





கே.பி.அன்பழகன் மீது தர்மபுரி கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய குற்றப்பத்திரிகை நகல் பெட்டியை போலீசார் எடுத்துச் சென்றனர். அடுத்தபடம்: விஜயபாஸ்கர் மீது புதுக்கோட்டை கோர்ட்டில் தாக்கல் செய்ய குற்றப்பத்திரிகை நகல் ஆவணங்களை போலீசார் எடுத்துச் சென்றனர்.

கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மூலம் சி.விஜயபாஸ்கர் அரவது மனைவி ரம்யாவின் உடந்தையுடன் அவரது பெயரிலும், குடும்பத்தினரின் பெயரிலும் ராசி புளூ மெட்டல்ஸ், ராசி என்டர்பிரைசஸ் ஆகிய பெயர்களில் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், இயந்திர தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் ஆபரணங்கள் என மொத்தம் 35 கோடியே 79 லட்சத்து 90 ஆயிரத்து 081 ரூபாய் அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார்.

மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டு புதுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு தொடர தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தலைவர் இசைவாணை பெற்று இன்று புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்ற மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு சட்டம் 2018 மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின்படி உரிய பிரிவுகளின் கீழ் 154 பக்கங்கள் கொண்ட குற்ற பத்திரிக்கையை லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பி இமயவரம்பன் தலைமையிலான போலீசார் தாக்கல் செய்தனர். இதனால் இன்று காலை புதுக்கோட்டை நீதிமன்றம் பரபரப்புடன் காணப்பட்டது.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.பி.அன்பழகன் மற்றும் சி.விஜயபாஸ்கர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் ஒரே நேரத்தில் இரு வேறு நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது அதிமுக வட்டாரத்தில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எடப்பாடி பழனிச்சாமி அமைச்சரவையில் பதவி வகித்த அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது தொடரப்பட்ட ஊழல் வழக்குகளில் முதல் முறையாக தற்போது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இருவர் மீதான வழக்கின் விசாரணை விரைவில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


## டைனாவிஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "அபெக்ஸ் பிளாசா", 5–வது தளம், எண்.3, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை – 600 034.
CIN : L31100TN1973PLC006439 Phone 044-28263651
Email: dvl@dynavision.in Website: www.dynavision.in

31-03-2023 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு

(ரூபாய் லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | தனிப்பட்டது | | | | | தொகுக்கப்பட்டது | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த மூன்று மாதங்கள் | | | முடிந்த ஆண்டு | | முடிந்த மூன்று மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
| | | 31.03.2023 (த.ஆனது) | 31.12.2022 (த.ஆகாதது) | 31.03.2022 (த.ஆனது) | 31.03.2023 (த.ஆனது) | 31.03.2022 (த.ஆனது) | 31.03.2023 (த.ஆனது) | 31.12.2022 (த.ஆகாதது) | 31.03.2023 (த.ஆனது) |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | 193.24 | 193.21 | 187.67 | 770.89 | 750.66 | 193.24 | 193.21 | 770.89 |
| 2 | நடப்பு காலத்துக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | 147.98 | 165.94 | 119.21 | 679.51 | 656.99 | 136.40 | 156.45 | 648.27 |
| 3 | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 147.98 | 165.94 | 119.21 | 679.51 | 656.99 | 136.40 | 156.45 | 648.27 |
| 4 | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 108.98 | 129.94 | 88.21 | 525.51 | 506.99 | 97.40 | 120.45 | 494.27 |
| 5 | இந்த காலகட்டத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் [(வரிக்கு பிந்தைய) மொத்த விரிவான வருவாய் லாபம்/ (நஷ்டம்) மற்றும் (வரிக்கு பிந்தைய) இதர விரிவான வருவாய்] | 108.98 | 129.94 | 88.21 | 525.51 | 506.99 | 97.40 | 120.45 | 494.27 |
| 6 | சமபங்கு முதலீடு 31-03-2023 | | | | 384.00 | 383.79 | | | 384.00 |
| 7 | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஸ்ஷீட்படி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வ் நீங்கலாக) | | | | 803.37 | 277.86 | | | 772.13 |
| 8 | பங்கு ஒன்றின் வருவாய் (சம பங்கு ஒன்றின் மதிப்பு தலா ரூ. 10/-) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது) அடிப்படை (ரூபாயில்) திரண்டது (ரூபாயில்) | 2.84<br>2.84 | 3.38<br>3.38 | 2.30<br>2.30 | 13.68<br>13.68 | 13.20<br>13.20 | 2.54<br>2.54 | 3.14<br>3.14 | 12.87<br>12.87 |

குறிப்பு : 1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015–ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளின் 33–வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 31-03-2023 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன 31-03-2023 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளமான www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளமான www.dynavision.in காணலாம்.

2. 31-03-2023 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான கம்பெனியின் நிதிநிலை முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 20-05-2023 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

3. நடப்பு ஆண்டில், கம்பெனியானது சூரிய மின் உற்பத்தி தொடர்பான செயல்பாடுகளை தொடர வேண்டுமென கருதி டைனாவிஷன் கிரீன் சொலியூஷன் லிமிடெட் என்கிற ஒரு துணை நிறுவனத்தை இணைத்துள்ளது அதன்படி, சூரிய மின் உற்பத்தி நடவடிக்கைகளை அறிக்கையிடக்கூடிய ஒரு தனி பிரிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

4. பங்கு மூலதனத்தின் மீதான பாக்கி தொகையான ரூ. 0.21 லட்சங்கள் நடப்பு ஆண்டின் போது பெறப்பட்டு சரிசெய்யப்பட்டது.

5. 31-03-2023 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டின் போது விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் சிறப்பு ரகங்கள் கணக்கிடப்படவில்லை.

இடம் : சென்னை
தேதி : 20-05-2023

இயக்குனர்கள் குழு சார்பில்
டைனாவிஷன் லிமிடெடுக்காக
R.P. அக்ரவால், இயக்குனர்